**ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), மதுரை - 02**

**மாணவர் சேர்க்கை**

2026-27 ஆம் கல்வியாண்டிற்கான இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான பதினொன்றாம் **கட்டக் கலந்தாய்வு 15.09.2026 நடைபெற உள்ளது.**

மாணவர் சேர்க்கைக்கான தகவல்கள் (www.smgacw.org) கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

பத்தாம் கட்டக் கலந்தாய்வு முடிவுற்ற நிலையில் மீதமுள்ள குறைவான காலியிடங்களுக்கு மட்டும் தரவரிசை மதிப்பெண் மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் கலந்தாய்வு நடைபெறும். இதற்கு முன் நடைபெற்ற கலந்தாய்வுகளில் பங்கேற்று சேர்க்கை பெறாத மாணவியரும், 14.09.26 வரை விண்ணப்பித்துள்ள மாணவியரும் இக்கலந்தாய்வில் பங்கேற்கலாம்.

கலந்தாய்வு காலை 9.30 மணிக்கு கயல் அரங்கில் தொடங்கும். எனவே மாணவியர் கட்டாயம் காலை 9.00 மணிக்கு வருகை புரிய வேண்டும். தாமதமாக வந்து சேரும் மாணவியர்கள் தங்களுக்கான வாய்ப்பை இழக்க நேரிடும். இளநிலை மாணவியர் சேர்க்கையின் போது அவசியம் பெற்றோர் வருகை தர வேண்டும். கலந்தாய்வு அரங்கத்திற்குள் மாணவியர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

## மாணவியர் அவசியம் கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்

1. பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பம் (மாணவியர் மற்றும் பெற்றோர்கள் கையெழுத்துடன் புகைப்படமும் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்).
2. அசல் மாற்றுச் சான்றிதழ் (அசல் மாற்றுச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு சேர்க்கை வழங்கப்பட மாட்டாது).
3. இணைய வழியில் பெறப்பட்ட சாதிச் சான்றிதழ்.
4. +1 மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழ் (+2 மதிப்பெண் சான்றிதழ் தலைமையாசிரியர் கையொப்பத்துடன்).
5. தொலைபேசி எண் மற்றும் பிறந்த தேதி இணைக்கப்பட்ட ஆதார் அட்டை.
6. ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குப்புத்தகம் (தனிக்கணக்கு).
7. பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 6 - போட்டோவின் பிற்புறம் மாணவியர் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
8. மாணவியர்களின் TC, Mark Sheet மற்றும் எல்லாச் சான்றிதழ்களையும் Xerox எடுத்து வைத்துக் கொள்ளவும். குறைந்தது எல்லாவற்றிலும் 10 காப்பி தேவை.

சாதிச் சான்றிதழ், ஆதார் மற்றும் அனைத்துச் சான்றுகளிலும் மாணவியர்களின் பெயர் முதலான விவரங்கள் எந்த வேறுபாடுகளும் இன்றி, ஒரே மாதிரி இருப்பதற்கான ஏற்பாடுகளை மாணவியர்கள் விண்ணப்பிக்கும் போதே செய்திருக்க வேண்டும்.

# இளநிலை சேர்க்கைக் கட்டண விவரம்

| பாடப்பிரிவுகள் | சேர்க்கைக் கட்டணம் (ரூ) | கணினி அறிமுகப் பயிற்சி (CLP) (ரூ) | பெற்றோர் ஆசிரியர் கழகம் (PTA) (ரூ) | கூட்டுறவு பண்டகசாலை (STORES) (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| இளமறிவியல் | 1190 | 1000 | 460 | 11 | 2661 |
| இளங்கலை | 1170 | 1000 | 460 | 11 | 2641 |
| இளங்கலை வணிக நிர்வாகவியல் | 1270 | 1000 | 460 | 11 | 2741 |
| இளம் அறிவியல் கணினி அறிவியல்/ கணினி பயன்பாட்டியல் | 1290 | - | 460 | 11 | 1761 |

முதல்வர்